# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 18 ஹிஜ்ரி 1433 ரபியுல் ஆஹிர் மார்ச் 2012

இலவசம்


# பன்முனைத் திறன்மிகு சமுதாயத்தை நோக்கி



# முஸ்லிம் சமூகம் இருமொழிக் கல்வித் திறன் பெற வேண்டும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் பரிந்துரை

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் இருமொழிக் கல்வித் தேர்ச்சியும் திறனும் பெற வேண்டும் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் வலியுறுத்தியிருக்கிறார்.

நமது கலாசாரம், மரபுகள் பற்றி இளையர்கள் அறிந்து பயனடைவதற்கு இருமொழிக் கல்வி பெரிதும் உதவும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருமொழிக் கல்வி தொடர்பான முயற்சிகளுக்கான லீ குவான் இயூ நிதி குறித்து கருத்துரைத்த அவர், மலாய்-முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நலம் நாடுவோர் யாவரும் அந்த நிதிக்கு நன்கொடை வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சிங்கப்பூர் பிள்ளைகள் மிக இளவயதிலேயே தங்கள் தாய்மொழியோடும் ஆங்கிலத்துடனும் தொடர்பு கொண்டு முன்னேறுவதற்கு உதவியாக லீ குவான் இயூ நிதி தொடங்கப்படுகிறது.

இருமொழிக் கல்வியை வலுப்படுத்த அது உதவும். குறிப்பாக, பள்ளிக்குச் செல்வதற்கு முந்திய வயதினரிடையே ஆங்கிலத்திலும், மலாய் உள்ளிட்ட தாய்மொழியிலும் நல்ல அடிப்படைத் திறனைப் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும். சிறு வயதிலேயே ஆங்கில மொழி, தாய்மொழி அறிமுகமாவது பிள்ளைகளுக்குத் தங்கள் பண்பாடு பற்றியும், மரபு குறித்தும் தெரிந்து கொள்வதற்கு, வழிவகுக்கும். இன்றைய உலகமய சூழ்நிலையில் பலவிதமான பின்னணிகளிலிருந்து வருகின்ற நண்பர்களுடனும், சக ஊழியர்களுடனும் தொடர்பு கொள்வதற்கு இருமொழிக் கல்வித் தேர்ச்சி பேருதவியாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

லீ குவான் இயூ நிதி தொடங்கப் படுவதால் இருமொழிக் கல்வி மேலும் வலுப்படுத்தப்படும் என்னும் தகவல் இந்திய சமூகத் தலைவர்களுக்கு நல்ல உற்சாகத்தைத் தந்துள்ளதாக நிதியமைச்சரும் துணைப் பிரதமருமான தர்மன் சண்முகரத்தினம் தெரிவித்துள்ளார். இருமொழிக் கல்விக் கொள்கை சிங்கப்பூரின் வெற்றிக்கும், தேச நிர்மாண முயற்சிகளுக்கும் முக்கிய அடித் தளமாக இருந்து வந்துள்ளது, இருக்கிறது, இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இருமொழிக் கல்வி தொடர்பான லீ குவான் இயூ நிதியை நிர்வகிக்க கல்வி அமைச்சு ஒரு குழுவை உருவாக்கும் என்றும், அதற்கு வழங்கப்படும் நிதியுதவி எவ்வளவு சிறிதாக இருந்தாலும் வரவேற்கப்படுவதாகவும் திரு. தர்மன் சண்முகரத்தினம் கூறினார்.

---

# பி.எஸ்.அப்துர் ரகுமான் பல்கலைக் கழக முன்னாள் மாணவர் அமைப்பின் சிங்கப்பூர் கிளை துவக்க விழா

பி.எஸ்.அப்துர் ரகுமான் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர்கள் அமைப்பின் சிங்கப்பூர் கிளை அதிகாரபூர்வமாக 11-02-2012 அன்று மாலை சுமார் 7 மணி அளவில் சுல்தான் பள்ளிவாசல் அரங்கத்தில் கோலாகலமான துவக்க விழா கண்டது.

சிறப்பு விருந்தினர்களாக சிங்கப்பூர் இந்திய மேம்பாட்டு கழகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. ராஜசேகர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், குவைத் நாட்டிற்கான சிங்கப்பூர் தூதருமான திரு. ஜைனுலாபிதீன் ரஷித் ஆகியோர் பங்கேற்று விழாவை சிறப்புற தொடங்கி வைத்தனர்.

சிங்கப்பூர் கிளையின் உறுப்பினர்கள் திரு. அஹமது மொஹிதீன், திரு. சமீன் ஹாஜா, திரு. அஜ்மல், திரு. சுலைமான், திரு. KMT

ஷைக்னா, திரு. காமில், திரு. கவுஸ் ஹமீது, திரு. ஷைக்னா, திரு. கணேஷ் பாலகிருஷ்ணன், திரு. பாலாஜி ஆகியோர் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகிகளை பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்.

சிங்கப்பூர் கிளையின் பொது செயலாளர் திரு. முஹம்மது இப்ராஹீம் அவர்கள் வந்திருந்த விழாவின் சிறப்பு விருந்தினர் அவர்களையும், பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினரையும் அறிமுகம் செய்து வரவேற்றார்.

சிங்கப்பூர் கிளையின் தலைவர் திரு. சையது யூசுப் அவர்கள் தலைமை உரையாற்றினார். சிங்கப்பூர் கிளையின் செயல்பாடுகள் குறித்தும், சமுகம் மற்றும் பல்கலைகழகம் ஆகியவற்றோடு ஒன்றிணைந்து செயல்படுவது குறித்தும் விரிவாகப் பேசினார்.

சிண்டாவின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. ராஜசேகர் அவர்கள் சிங்கப்பூர் கிளையை அதிகாரபூர்வமாக திறந்து வைத்து பேசுகையில், சிண்டாவோடு இணைந்து சமூகப் பணியாற்றிட வேண்டுகோள் விடுத்தார். குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் சிங்கப்பூர் இந்திய சமுகத்திற்கு உதவிடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் திரு. அப்துல் காதிர் ரகுமான் புகாரி அவர்கள் சிங்கப்பூர் கிளையின் இணையதளத்தை (http://alumnisg.bsauniv.ac.in/) அதிகாரபூர்வமாக துவக்கி வைத்துப் பேசுகையில், தனது தந்தையும் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான அல்ஹாஜ் டாக்டர் பி.எஸ்.அப்துர் ரகுமான் அவர்கள் நிறுவிய கிரசன்ட் பொறியியல் கல்லூரி இன்று அவர்களின் பெயரை பறைசாற்றும் வகையில் பி.எஸ்.அப்துர் ரகுமான் பல்கலைக்கழகமாக, தொழில்நுட்பத் துறையில் சாதனை படைத்து வருவதாகத் தெரிவித்தார். மேலும் சிங்கப்பூர் அமைப்பு பல்கலைக் கழகத்தோடு இணைந்து செயலாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துரைத்தார்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கன்னியப்பன் பேசுகையில், பி.எஸ்.அப்துர் ரகுமான் பல்கலைக் கழகம், 2009ம் ஆண்டு இந்திய பல்கலைகழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்டது என்றும், கடந்த



25 ஆண்டு காலமாக தொழில்நுட்ப கல்வி துறையில் கிரசன்ட் பொறியியல் கல்லூரியாக தரமான கல்வி வழங்கி வந்தது என்றும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரியசாமி, பல்கலை கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திரு. அகமது புகாரி, திரு. அஷ்ரப் புகாரி ஆகியோர் விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள்.

தமிழ்நாடு திருச்சி MIET குழும நிறுவனங்களின் துணைத் தலைவர் முனைவர் முகமது ஜலீல், பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் அமைப்பின் தலைவர் திரு. பாஸ்கர் காஞ்சி ஆகியோர் விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள்.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் முனைவர் தீன் அவர்கள் சிங்கப்பூர் கிளையின் சஞ்சிகையை வெளியிட்டு பேசுகையில் தமது பேரவையுடன் சிங்கப்பூர் கிளை இணைந்து சமுக தொண்டாற்றிட வேண்டுகோள் விடுத்தார்.

சிங்கப்பூர் கிளையின் பொருளாளர் திரு. ஹாஜா சைபுதீன் அவர்களின் நன்றி உரையில், சிங்கப்பூர் கிளை உருப்பெறவும், அமைப்பின் திறப்பு விழா சிறப்புறவும் பல்வேறு வகைகளிலும் உதவியோர், விழாவிற்கு வந்திருந்த சிறப்பு அழைப்பாளர்கள், முன்னாள் மாணவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், குழந்தைகள், பெரியோர் அனைவருக்கும் விழாக்குழு சார்பில் தனது நன்றியினை தெரிவித்தார். சிங்கப்பூர் கிளையின் முன்னாள் மாணவர்கள் தங்களின் குடும்பத்தாரோடு வந்து விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சுய முன்னேற்றப் பயிலரங்கு

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) கடந்த ஒரு வருடமாக பொதுமக்களுக்கான இலவச கணிதப் பயிலரங்கு மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. திருச்சி மாநகரில் 1951ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 61 ஆண்டுகள் உயர்கல்வி வழங்குவதில் சரித்திரம் படைத்த இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூரில் சமூகநலத் தொண்டு புரிவதின் தொடர்ச்சியாக, 29-01-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று வில்கி சாலையில் அமைந்துள்ள கப்லன் உயர்கல்வி கழகத்தின் இரண்டாம் தளத்தில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை “சுய முன்னேற்றம் அடைதல்” என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவசப் பயிலரங்கு ஒன்றை மிகச்சிறப்பாக நடத்தியது. சுமார் 100 பேர் கலந்துகொண்டு பயன்பெற்ற இப்பயிலரங்கை, 29 ஆண்டுகள் பயிலரங்குகள் நடத்துவதில் அனுபவம் பெற்ற இக்கல்லூரியின் முன்னாள் மாணவர், திரு. அப்துல் கரீம் நடத்தினார்.

சமூக ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் நோக்கில், “குடும்பதின விழா” ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகளையும் இச்சங்கம் செய்து வருகிறது.

## சிண்டாவுடன் இணைந்து நடத்திய பெற்றோர்களுக்கான கணிதப் பயிலரங்கு

சிண்டாவும் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சிங்கப்பூர்





கிளையும் இணைந்து, 19-02-2012 ஞாயிற்றுக் கிழமை அன்று “உங்கள் குழந்தைகள் கணிதத்தில் சிறந்த மதிப்பெண்கள் பெற எவ்வாறு உதவலாம்?” என்ற தலைப்பில் பெற்றோர்களுக்கான கணிதப் பயிலரங்கை நடத்தின. இந்தப் பயிலரங்கின் முக்கிய நோக்கமாக பிள்ளைகளின் கல்வியில், குறிப்பாக கணிதப் பாடத்தில் பெற்றோர்களின் பங்கும், கற்பதற்கான சிறந்த சூழ்நிலையை எவ்வாறு அமைக்கலாம் என்பதனையும் பற்றிக் கணித விரிவுரையாளரும் முன்னாள் மாணவர் சங்கத்தின் உறுப்பினருமான திரு. அமானுல்லா விரிவாக விளக்கினார்.

சிண்டாவின் இருபதாம் ஆண்டு நிறைவை ஒட்டிய அறிக்கையின் கீழ், சமூகத்திலுள்ள பிற சமூக அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், கூடுதலாக மாணவர்களையும் பெற்றோர்களையும் சென்றடைய முடியும் என்பதை இந்தக் கணிதப் பயிலரங்கம் மெய்ப்பித்துள்ளது. 26 ஆண்டுகள் கணிதம் கற்றல் கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த திரு. அமானுல்லாவின் கணிதம் கற்றல் கற்பித்தல் தொடர்பான உத்திகளும் ஆலோசனைகளும் வந்திருந்த பெற்றோர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது.

இந்தப் பயிலரங்கில் கலந்து கொண்ட சிண்டாவின் STEP துணைப்பாட மாணவரின் தந்தையான திரு. ஷபீர் ஹுசைன், கணிதம் கற்றல் தொடர்பான பல முக்கியமான தகவல்களைத் தான் கற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார். இந்தியச் சமூகத்திலுள்ள ஏனைய

# மலபார் மஸ்ஜித் மதரஸா விருதளிப்பு தலைமை முஃப்தி விருதுகளை வழங்கினார்

மலபார் மஸ்ஜித் *18.2.2012* அன்று அதன் மதரஸா விருது வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. தலைமை முஃப்தி டாக்டர் முஹம்மது ஃபத்ரிஸ் பகரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். எழுபதுக்கு மேற்பட்ட மதரஸா மாணவ, மாணவியர் முஃப்தி அவர்களிடமிருந்து விருதுகளைப் பெற்றனர்.

குர்ஆன் ஓதும் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களைப் பாராட்டவும், குர்ஆன் மனப்பாடப் பயிற்சியின் பல கட்டங்களில் தற்போது ஈடுபட்டுள்ளவர்கள் மேலும் தேர்ச்சி பெறுவதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவும் இந்த விருதளிப்பு நடைபெற்றது.

மலபார் மஸ்ஜிதில் வகுப்பறை இடவசதிகள் போதிய அளவுக்கு இல்லாவிட்டாலும், கடந்த பல ஆண்டுகளாக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு வார இறுதி மதரஸா வகுப்புகளை மஸ்ஜித் நிர்வாகம் நடத்தி வருகிறது. இமாம்களின் மேற்பார்வையில் பல மாணவ, மாணவிகள் குர்ஆன் ஓதும் பயிற்சியை சிறப்பாக முடித்துள்ளனர். முயிஸ் மார்க்கக் கல்வி பாடத் திட்டத்தை மலபார் மஸ்ஜித்





மதரஸா இன்னமும் பின்பற்றாவிட்டாலும், சொந்த வழிமுறைகளில் நமது முஸ்லிம் சமூக சமய மேம்பாட்டுக்குப் பங்காற்றிவருவதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மலபார் மஸ்ஜித் வார இறுதி மதரஸா வகுப்புகளில் இப்போது சுமார் *90* மாணவர்கள் பயின்று வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் இந்த எண்ணிக்கை பாதியளவாகவே இருந்தது. அதிக அளவிலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மதரஸா வகுப்புக்கு அனுப்பி வருவது மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருவதாக மலபார் மஸ்ஜித் நிர்வாகம் தெரிவித்தது. முயிஸ் மார்க்கக் கல்வி பாடத் திட்டத்தைப் பின்பற்றுவது, முழுநேர மதரஸா ஆசிரியர்களை நியமிப்பது உள்ளிட்ட செயல் திட்டங்களைப் பரிசீலித்து வருவதாகவும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

விருது வழங்கும் இவ்விழாவில் தொண்டூழியர்களும், நன்கொடை வழங்கிவரும் புரவலர்களும் சிறப்பிக்கப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---

பெற்றோர்களும் இம்மாதிரியான பயிலரங்குகளில் பங்கேற்று பயன் அடைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சிண்டா, எதிர்வரும் காலங்களில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் போன்ற பிற சங்கங்களுடன் இணைந்து பற்பல நடவடிக்கைகளில் ஈடுபட திட்டம் கொண்டுள்ளது. இம்மாதிரியான கூட்டு முயற்சிகளின் மூலம், இந்தியச் சமுதாயத்தில் பாலர் பள்ளியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்ச்சியையும் கணிதப் பாடத்தின் முக்கியத்துவத்தையும் அதிகம் வலியுறுத்த முற்படும்.

# ஜாமியாவின் ஒப்பற்ற அன்னை விருது நிகழ்ச்சியில் அதிபர் டோனி டான்

ஆண்டுதோறும் நடைபெறும் ஜாமியாவின் ஒப்பற்ற அன்னை விருது வழங்கும் சிறப்புத் தேநீர் விருந்து நிகழ்ச்சி சென்ற அக்டோபர் மாதம் ராபிள்ஸ் மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தொண்டூழியர்கள், நன்கொடையாளர்கள், வெளி நாட்டு தூதர்கள், சமூகத்தலைவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் சிங்கப்பூர் அதிபர் டாக்டர் டோனி டான் அவர்கள் தனது துணைவி யாருடன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இவ்விருதிற்காகப் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு ண்ணப்பங்களிலிருந்து திருவாட்டி சுரையா 2011ஆம் ஆண்டின் ஒப்பற்ற அன்னையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு அதிபர் டோனி டான் சுழற் கேடயத்தினையும் ஐந்தாயிரம் வெள்ளி பரிசுத்தொகையினையும் வழங்கினார்.

பல்வேறு இக்கட்டான சூழ்நிலையிலும் தமது குடும்பக் கடப்பாடுகளை திறம்பட நிறைவேற்றி தம் பிள்ளைகள் கல்வி மற்றும் சமூக அந்தஸ்தில் உயர்நிலை அடைந்திடப் பாடுபட்டதோடு தமது சமூகக்கடப்பாட்டினையும்



பொறுப்புடன் ஆற்றி வந்துள்ள திருவாட்டி சுரையா போன்றவர்கள் அன்னையருக்கு ஒரு நல்ல முன்மாதிரி. இத்தகைய அன்னையர்களை இனங்கண்டு கவுரவிக்கின்ற ஜாமியாவின் இந்த நலப்பணி பாராட்டுதற்குரியது.

# சிங்கப்பூரின் முன்னாள் அதிபர் எஸ். ஆர். நாதன் அவர்களின் நற்பணிகளுக்கு பாராட்டு

சிங்கப்பூர் ஜாமியா அற நிறுவனம், சிங்கப்பூர் புத்த சங்கம், இந்து அறக்கட்டளை வாரியம் மற்றும் பல்வேறு சமூக அமைப்புக்கள் இணைந்து முன்னாள் அதிபர் எஸ். ஆர். நாதன் அவர்களுக்கு அவரது நற்சேவைகளைப் பாராட்டி தேநீர் விருந்து நிகழ்ச்சி ஒன்றினை நடத்தின. ஜாமியா அற நிறுவன அரங்கில் டிசம்பர் மூன்றாம் தேதி நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தகவல் தொடர்பு மற்றும் கலைகள் துறை அமைச்சரும் முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சருமான டாக்டர் யாகூப் இபுறாஹிம், தேசிய வளர்ச்சித் துறை அமைச்சர் கோ பூன் வான், ஜாமியாவின் முன்னாள் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன், சிங்கப்பூர் புத்த சங்கத்தின் தலைவர் லீ போக் குவான், இந்து ஆலோசனை வாரியத்தின் தலைவர் ராஜா ராம் பாவாஜி, பல சமய நல்லிணக்கச் சங்கத்தின் தலைவர் அஷ்வின் தேசாய், ஏராளமான சமூகத்தலைவர்கள், அற நிறுவனம் மற்றும் தொண்டூழிய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பலசமய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தொண்டூழியர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி



யில் முன்னாள் அதிபர் எஸ். ஆர். நாதன் அவர்கள் தம் துணைவியாருடன் கலந்து கொண்டார். அவரது வாழ்க்கை சாதனைகளை பட்டியலிட்ட அழகிய குறுநூல் ஒன்றும் , பல்லூடகப் பதிவு ஒன்றும் நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது.

# PHOTO NEWS

# படச் செய்திகள்




PM Lee Hsien Loong at Mosque Convention 2011, 4 Dec 2011



Completion of upgrading works at Hajjah Rahimabi Kebun Limau Mosque, 17 Feb 2012



Asatizah Engagement Series, 9-10 Feb 2012




Seminar Asatizah 2012, 11 Feb 2012



A premier lecture to celebrate Prophet Muhammad's birthday, 4 Feb 2012



Sohibus Samaha Mufti Dr. Mohamed Fatris Bakaram delivering the lecture, 4 Feb 2012



Rahmatan Lil Alamin cheque handover for Southern Philippines flood victims, 27 Jan 2012




Youth aL.I.V.E. discourse program with Imam Dr. Bashar Arafat, 3 Dec 2011

# "நாளை பற்றி இன்று சிந்திப்போம்" கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்ப தின விழா

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்ப தின விழாவை 27.11.2011 காலை 8 மணி முதல் மாலை 5.30 வரை வெஸ்ட் கோஸ்ட் பூங்காவில் கோலாகலமாகக் கொண்டாடியது.

இச்சங்கத்தின் பிரதான நிகழ்ச்சிகளில் ஒன்று குடும்ப தின விழா. தலைமுறைக் குடும்பங்களுக்கு இடையே புரிந்துணர்வை ஏற்படுத்த ஆண்டு தோறும் இந்த விழா பயன்படுத்தப்படுகிறது.

விடுமுறை நாளை குடும்பத்துடன் கழித்து மகிழ்வது விழாவின் இலக்கு. "நாளை பற்றி இன்று சிந்திப்போம்" என்பது இவ்வாண்டின் கருப்பொருள். அதற்கேற்ப, குடும்பத்தினரையும் சமூகத்தினரையும் ஒன்றிணைத்து, உறவுகளையும் பிணைப்பு களையும் வலுப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குடும்ப உறுப்பினர்கள் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பரிசு பெறவும், இதமான பூங்காச் சூழலில் இளைப்பாறவும், உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து





அன்பைப் பரிமாறிக் கொள்ளவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுவாரசிய மான குழு இசைப் பாட்டு, போட்டிகளும், சிறார் முதல் மூத்த குடிமக்கள் வரை அனைவரும் பங்கேற்கத் தக்க பல்சுவை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அனைவருக்கும் சிற்றுண்டியும், மதிய உணவும் வழங்கப்பட்டன.

புதிய குடியேறிகளை சிங்கப்பூரர்களுடன் இணைக்கும் வண்ணம் அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஹிஜ்ரி புத்தாண்டை வரவேற்கும் விதத்திலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களை அணி திரட்டி இந்தக் குடும்ப தின விழாவை குதூகலமாகக் கடையநல்லூர் முஸ்லிம் லீக் கொண்டாடியது.

செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு விக்ரம் நாயர் உள்ளிட்ட பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அனைவருக்கும் முறையான போக்கு வரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

# மின்நூல் E-Book பதிப்புப் பணியில் நமது மாணவ மணிகள்

சிங்கப்பூரில், வரும் ஜூலை மாதம் உலகத் தமிழ்ப் பல்கலைக் கழக இளையர் மாநாடு நடைபெறவிருக்கிறது. அந்த மாநாட்டிற்கான மின்நூல் E-Book பதிப்புப் பணிக்குப் பொறுப்பேற்றுள்ள குழுவில் நமது மாணவ மணிகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழக மாணவர்களின் அரிய முயற்சியினால் ஜூலை 6 முதல் 8 வரை பல்கலைக் கழக கலாசார மையத்தில் மாநாடு நடைபெறும்.

"தமிழ் இளையர் அடையாளம் ஒரு கண்ணோட்டம்" என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த மாநாட்டின் தலையாய நோக்கம் உலகெங்கும் வாழும் தமிழ்ப் பல்கலைக் கழக இளையர்களை ஒன்றிணைப் பதும், அவர்களது ஆய்வுப் பணிகளை ஒரே மேடையில் வெளிப்படுத்துவதுமாகும்.

"உலகத்தின் எந்தப் பகுதியிலும், எந்தவொரு பல்கலைக் கழகத்திலும் படித்துக் கொண்டிருக்கும் இளையர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கலாம். அவர்கள் சமர்ப்பிக்கும் ஆய்வுக் கட்டுரைகளைப் பாரம்பரிய புத்தக வடிவில் அல்லாமல் மின்நூலாக வெளியிட விரும்புகிறோம். அதன் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள பிப்ரவரி மாதம் 26-ஆம் தேதி கேலாங் கிழக்கு சமூக மன்றத்தில் நடந்த மின்நூல் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டோம்" என்றார் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் செயலாளரும், பதிப்புக் குழுவின் தலைவருமான இர்ஷாத் முஹம்மது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழக முதலாண்டு மாணவரான அவருடன் மாணவி நசீமா, தர்க்ஷிணி ஆகியோர் மின்நூல் பதிப்புக் குழுவில் உள்ளனர். பல்கலைக் கழகத் தமிழ்ப்



பேரவையின் ஆண்டு சஞ்சிகையையும் மின்நூலாகக் கொண்டுவரத் திட்டமிட்டிருப் பதாக பதிப்புக் குழுவின் உறுப்பினர்கள் கூறினர்.

முரசு அஞ்சல் தமிழ் சொற்செயலியை உருவாக்கித் தந்த திரு. முத்து நெடுமாறன், E-book எனப்படும் மின்நூலின் அடிப்படை, அவற்றை உருவாக்கும் முறை, அவற்றால் ஏற்படக்கூடிய நன்மைகள் போன்றவற்றை உள்ளூர் எழுத்தாளர்களுக்கும், மாணவர் களுக்கும் கருத்தரங்கில் விளக்கினார். "புதிய தலைமுறை மின்னியல் உலகுக்குப் பழக்கப்பட்டு விட்டது. இந்த உண்மை ஒன்றே போதும் புத்தகங்களின் எதிர்காலம் மின்நூல் என்று சொல்வதற்கு" என்று அவர் கூறினார்.

உலகத் தமிழ்ப் பல்கலைக் கழக இளையர் மாநாட்டிற்கு திரு. அருண் மகிழ்நன் கௌரவ ஆலோசகராகப் பொறுப்பு வகிக்கிறார்.

இதுவரை 2 மில்லியன் மின்நூல்கள் வெளிவந்துள்ளன. அந்தத் தொழில் நுட்பத் தைப் பின்பற்றி நாமும் மின்நூல்களைத் தொடர்ந்து வெளியிட வேண்டும். அது காலத்தின் கட்டாயம் என்று கூறுகிறார் இர்ஷாத்.

# சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் சிறப்பு விழாக்கள்

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், உத்தம திருநபி(ஸல்) உதய தினவிழா மற்றும் அல் மதரஸா நூருல் இஸ்லாம் ஆண்டு விழாவை 5.2.2012 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடத்தியது. சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் மதியம் 2 மணியளவில் தொடங்கிய விழாவினை சங்கத்தின் தலைவர் ஹாஜி ஹசன் குத்தூஸ் அவர்கள் தலைமை யேற்று நடத்தினார்.

நூருல் இஸ்லாம் மதரஸாவின் மாணவி ரைஹானிதா செய்யத் கிராஅத் ஓதினார். சங்கத்தின் செயலாளர் ஹாஜி P.N. ஃபஹ்ருதீன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உள்துறை மற்றும் வெளியுறவு அமைச்சுக்கான துணை அமைச்சர் ஜனாப் மஸகோஸ் ஜுல்கிஃப்லி சிறப்புரையாற்றினார். அவர், 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுக்கான இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையும், மதரஸா உஸ்தாத், உஸ்தாதாக்கள் அனைவரு க்கும் நினைவுப் பரிசுகளும் வழங்கினார்.

அடுத்து, மதரஸா மாணவ மாணவி களின் பற்பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தென் இந்திய ஜம்யியத்துல் உலமா சபையின் உஸ்தாத் மௌலவி ஜஃபருல்லாஹ் ரஹ்மானி தலைமையில் பென்கூலன் பள்ளியின் இமாம் மௌலவி அப்துல் கய்யூம் பாகவி, சூலியா பள்ளியின் இமாம் மௌலவி அப்துல் மாலிக் தேவ்பந்தி, திருவிதாங்கோடு சங்கத்தின் உஸ்தாத் மௌலவி கே. ரஹ்மத்துல்லாஹ் மஹ்ளரி, தென்காசி சங்கத்தின் உஸ்தாத் ஹசன் அலி ஃபைஜி ஆகியோரும் சேர்ந்து நடத்திய பட்டிமன்றம் சிறப்பு அம்சமாக இருந்தது. சிங்கப்பூரின் தலைமை முஃப்தி முஹம்மது ஃபத்ரிஸ் பகரம் அவர்கள் உலமாக்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சமுதாயத்தின் முக்கிய பிரமுகர்களும், நூற்றுக்கணக்கான பொது மக்களும் கலந்து கொண்டார்கள். சங்கத்தின் துணைத் தலைவர் ஹாஜி K.P. முஹம்மது ஜாஃபர் நன்றியுரை நிகழ்த்தி துஆ ஓதினார். நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## ஹஜ் உபசரிப்பு

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ஹஜ் உபசரிப்பு நிகழ்ச்சியை 1.1.2012 அன்று சிறப்பாக நடத்தியது. ஹிஜ்ரி 1432ஆம் ஆண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய சங்க உறுப்பினர்களான ஹாஜிகளுக்கு வரவேற்பு நல்கவும், நினைவுப் பரிசு வழங்கவும் கம்போங் டெல்டா பள்ளிவாசலில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஜனாப் ஹாஜி N.M. ஹசன் குத்தூஸ் உபசரிப்பு நிகழ்ச்சிக்குத் தலைலமை தாங்கி ஹாஜிகளுக்கு நினைவுப்



பரிசு வழங்கினார். சங்கத்தின் உஸ்தாத் ஹசன் அலி ஃபைஜி, ஹாஜிகளை வரவேற்றும், வாழ்த்தியும் பேசினார். துணைத் தலைவர் ஹாஜி K.P. முஹம்மது ஜாஃபர் அனைவருக்கும் நன்றி கூறினார். ஹாஜிகளை உபசரிக்கும் இந்த நிகழ்ச்சியில் அதிகமான ஆண்களும் மாதர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## கல்விச் சுற்றுலா

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், அதன் அல் மதரஸா நூருல் இஸ்லாம் மாணவ, மாணவிகளின் கல்விச் சுற்றுலா நிகழ்ச்சியை 8.1.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தியது. காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அவர்கள் சுங்கை பூலோ வெட்லாண்ட் பகுதிக்குச் சென்று ஆறு, மரங்கள், பறவைகள் நிறைந்த இயற்கைச் சூழலைக் கண்டு

# செங்காங் பள்ளிவாசலில் தமிழ் மதரஸா

செங்காங் மஸ்ஜித் அல்-மவத்தாஹ்வில் தமிழ் மதரஸா 4 மார்ச் 2012 முதல் தொடங்கப்படு கிறது. ஆண்கள், மாதர்கள், மாணவ மாணவியர் களுக்கான இந்த மதரஸா ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 2 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நடைபெறும்.

தொடக்க விழாவில் சிறப்பு விருந்தின ராக பென்கூலன் பள்ளிவாசலின் தலைவர், தொழிலதிபர் ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல்PBM கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர், பள்ளிவாசலின் தலைவர் ஹாஜி சக்டுன் சப்ரி ஆகியோருடன் தமிழ் மதரஸாவின் நிர்வாகிகளும் சிறப்பு அழைப்பாளர்களும் தேநீர் விருந்தில் கலந்து கொண்டனர்.

பென்கூலன் பள்ளிவாசல் தலைமை இமாம் ஹாபிஸ் எம்.எ. அப்துல் கய்யூம் பாகவியின் மேற்பார்வையில் இந்தத் திட்டம் செயல்படும் என்று செங்காங் பள்ளிவாசல் தமிழ் மதரஸா நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். தமிழ் முஸ்லிம் குடும்ப உறுப்பினர்கள் திருக்குர்ஆனை ஓதவும், மார்க்கக் கல்வி பெறவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முன்வரும்படி அவர்கள் கேட்டுக் கொண்டு ள்ளனர்.

குடும்பமாகச் சேர்ந்து தொழக்கூடிய தொழுகை அறை, கணினி வசதிகளைக் கொண்ட இளையர் செயல் முனையம், வகுப்பறைகள், முதலான வசதிகள் இப் பள்ளிவாசலில் உள்ளன.



அல்-மவத்தாஹ் பள்ளிவாசல் நிர்வாகக் குழு, இஸ்லாமியத் தமிழ்ச்சமுக நலனுக்காக பல்வேறு நற்பணிகளை மேற்கொண்டுள்ளது. இளையர்களை பெரும் எண்ணிக்கையில் ஈர்ப்பது அதன் இலக்கு. தமிழ் மதரஸா தொடக்கம் குறிப்பிடத்தக்கது. மஸ்ஜித் அல்-மவத்தாஹ் புவங்காக் எம்ஆர்டி ரயில் நிலையத்திற்கு அருகில் கம்பாஸ்வேல் போ-செங்காங் ஈஸ்ட் சாலை முனையில் அமைந்துள்ளதால் மக்கள் எளிதாகச் சென்றடையலாம்.


**தொடர்பு எண்கள்:**
*96905800 92988871 93685371*

**மின்னஞ்சல்:**
tamilmadrasah@almawaddah.mosque.org.sg

**முகவரி:**
Masjid Al-Mawaddah,
151. Compassvale Bow, Sengkang




மகிழ்ந்தனர். மாணவ மாணவிகள் மட்டுமின்றி பெற்றோர்களும் இந்தச் சுற்றுலா குறித்து மிகுந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தனர்.

கல்விச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மதரஸா மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் காலைச்சிற்றுண்டியும் மதிய உணவும் வழங்கியது. அவர்களுக்கு, உரிய பேருந்து வசதியையும் சங்கம் செய்திருந்தது.

# கடையநல்லூர் முஸ்லிம் லீக் மீலாது விழா நற்பணிகளை விரிவுபடுத்த உறுதி

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் 1.2.2012 மாலையில் அல்முஜாஹிதீன் பள்ளிவாசல் மேல் தள அரங்கில் மீலாது விழாவை சிறப்பாக நடத்தியது.

இசைவாணர் உ.ஹ. அப்துல் மஜீது அண்ணல் நபிகளாரைச் சிறப்பிக்கும் வாழ்த்துப் பா இசைத்தார்.

சங்கத்தின் செயலாளர் மு.அ. மசூது தமது தொடக்கவுரையில். சங்க நிர்வாகம் மேற்கொண்டுள்ள நான்கு சிறப்புப் பணிகளை விவரித்தார்.

சிறைச்சாலை கைதிகளுக்கு தொண்டூழியர்கள் வழங்கி வரும் ஆலோசனைச் சேவை, சங்க மதரஸாக்களின் உஸ்தாதுமார்கள் ஆற்றிவரும் பாராட்டுக்குரிய பணி, மாதர் குழு எட்டு ஆண்டுகளாக மேற்கொண்டுள்ள உதவிப் பணி, மாணவர்களுக்கான உபகார நிதி ஆகியவற்றை அவர் விளக்கினார்.

கல்வி உதவி நிதிக்கு நன்கொடை வழங்கி வரும் பெருமக்களுக்கு சங்கத்தின் சார்பில் ஹாஜி மசூது நன்றி கூறினார். சங்கம் 2006ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வரும் சிறைச்சாலை தொண்டூழியர் பணியை ஜனாப் நிஸாம் விளக்கினார். தற்போது 70 தொண்டூழியர்கள் 110 கைதிகளுக்கு ஆலோசனை சேவை வழங்கி வருகிறார்கள். Bridge SKML எனும் அந்த சேவையின் மூலம் அவர்கள் கைதிகளுக்கு குர்ஆன் ஓதும் பயிற்சி, தொழுகை பயிற்சி முதலானவற்றை வழங்கி வருகின்றனர்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக் மூன்று பள்ளிவாசல்களிலும், சங்கத்திலும் மதரஸாக் களை நடத்தி வருகிறது. மதரஸா உஸ்தாது களுக்கு பாராட்டுப் பட்டயங்கள் வழங்கப் பட்டன. சங்கத்தின் புரவலர் கஸாலி, கல்வி உபகார நிதி வழங்கிவரும் புரவலர் எஸ். எம். ஜலீல் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

மீலாது உரையாற்றிய மௌலவி எம். முஹம்மது மைதீன் ஃபைஸி அவர்கள்,



பெருமானாரின் முன்னுதாரணமான திருப் பணிகளை எடுத்துரைத்தார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அகில உலகுக்கும் அரிய முன்மாதிரியாக இருந்திருக்கிறார்கள். நற் பண்புகளை உலகுக்குக் கற்றுக் கொடுக்கவே அவர்கள் அவதரித்தார்கள். இளமையிலிருந்தே சமூகப் பார்வையுடன் அவர்கள் இயங்கி இருக்கிறார்கள் என்பதை உரிய எடுத்துக் காட்டுகளுடன் அவர் விளக்கினார்.

அண்ணலாரின் எளிமையான, தூய்மை யான வாழ்க்கை நெறியைப் பின்பற்றி அனைவரும் முன்னேற வேண்டும். அவர்களின் நற்பண்புகளைப் பேணி வளர்க்க வேண்டும் என்று மௌலவி எம். முஹம்மது மைதீன் ஃபைஸி குறிப்பிட்டார்.

கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி, சங்கத்தின் நற்பணிகளில் பங்கேற்றவர்களுக்கும் உதவி நல்கிவரும் பெருமக்களுக்கும் தமது உரையில் நன்றி பாராட்டினார்.

வெகுசிறப்பாக 12 இரவுகள் மவ்லூது ஷரீப் நடைபெறுவதற்கு உதவிய மதரஸாவின் உஸ்தாத் மௌலவி எம். முஹம்மது மைதீன் ஃபைஸி, சங்கத்தின் முன்னாள் தலைவர் O.S. முஹம்மது காசிம், சகோதரிகள் ஹாஜிரா, மரியம் முதலானோருக்கும், கல்வி உதவித் தொகைக்கு கணிசமான நிதி வழங்கியவர் களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவாக, மக்ரிப் தொழுகைக்கு முன், அனைவருக்கும் தப்ரூக் வழங்கப்பட்டது.